பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 01 2025 Thursday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஸ்ரீஹரிகோட்டாவில் 3 ஆயிரத்து 984 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில், மூன்றாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- உலகின் தேவைக்கான திறன்மிக்க பணியாளர்களை உருவாக்கித் தரும் முயற்சியை இந்தியா முனைப்புடன் மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- எம்.பி.பி.எஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு இவ்வாண்டும் OMR தாள் முறையிலேயே நடத்தப்படும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.
- மகா கும்பமேளாவை ஒட்டி 10 நாடுகளிலிருந்து வெளியுறவுத்துறை மூலம் அழைக்கப்பட்ட சிறப்பு தூதுக் குழுவினர் இன்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்
- ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - மெக்ஸிகோவின் Reyes Varela இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<

ஸ்ரீஹரிகோட்டாவில் 3 ஆயிரத்து 984 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில், மூன்றாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஏவுதள கட்டுமானப் பணிகள் நான்காண்டுகளுக்குள் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

மத்திய அரசு ஊழியர்களுக்கான 8வது ஊதியக் குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ஊதியக்குழுவின் தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

7வது ஊதியக்குழுவின் காலவரம்பு 2026ஆம் ஆண்டு இறுதியுடன் முடிவடையவுள்ள நிலையில், எட்டாவது ஊதியக்குழு அதன் பரிந்துரைகளை அளிக்க போதுமான அவகாசம் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எட்டாவது ஊதியக்குழு அமைக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு எடுத்துள்ள முடிவை வரவேற்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் லட்சக்கணக்கான மத்திய அரசு ஊழியர்கள் இதன் மூலம் பயன்பெறுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<

பாதுகாப்பான சாலை பயணத்தை உறுதி செய்ய மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சாலை பாதுகாப்பு குறித்த தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், இந்தியாவில் ஏற்படும் சாலை விபத்துகளில் உயிரிழப்போரில் சுமார் 66 சதவீதம் பேர் 18 முதல் 45 வயதுடையவர்களாக உள்ளதாக கூறினார்.

கார்களில் பின் இருக்கையில் பயணம் செய்வோரும், சீல் பெல்ட் அணிவது கட்டாயமாக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், மின்னணு பிரேக் போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

சாலைப் பயணம் பாதுகாப்பானதாக அமைவதை உறுதி செய்ய தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், சாலை விபத்துகளால் ஏற்படும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் அதிகாரிகளை திரு. நிதின் கட்கரி கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

உலக அளவில் திறன்மிக்க பணியாளர்களை உருவாக்குவதில், இந்தியா சிறப்பாக செயலாற்றி வருவதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று எதிர்கால வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உலக தரத்திலான திறன்மிக்க பணியாளர்களை பரஸ்பரம் மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொண்டு பணியாளர் பற்றாக்குறையை போக்குவதற்கான முயற்சிகளையும் இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக கூறினார்.

தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப தரமான பயிற்சியை அளித்து, அனுபவமிக்க தொழிலாளர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திறன்மிக்க பணியாளர்கள் தாங்களாகவே சுயவேலைவாய்ப்பு பெறுவதற்கான ஊக்குவிப்பு திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் அடிப்படை தேவைக்கேற்ப திறன்மிக்க பணியாளர்களை உருவாக்கி, வலுவான தொழில் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் 10 நாடுகளைச் சேர்ந்த 21 பேர் அடங்கிய சிறப்பு தூதுக் குழுவினர் கலந்து கொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்

மகாகும்பமேளாவின் நிகழ்வுகளை இக்குழுவினர் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டனர்.

இந்த தூதுக்குழுவினர் வெளியுறவு அமைச்சகத்தின் அழைப்பின் பேரில் பிரயாக்ராஜ் வந்துள்ளனர்.

அவர்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மகா கும்பமேளா நடைபெறும் அனைத்து பகுதிகளுக்கும் அவர்கள் சென்று, பாரம்பரிய மற்றும் கலாச்சார நிகழ்வுகளை கண்டு ரசித்தனர்.

ஃபிஜி, ஃபின்லாந்து, காயானா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, டிரினிடாட் டொபாக்கோ, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளிலிருந்து வந்திருந்த இந்த தூதுக்குழுவினர், மகாகும்பமேளா விழா மேடையில் பாரம்பரிய முறைப்படி கௌரவிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<

எம்.பி.பி.எஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு இவ்வாண்டும் OMR தாள் பதிவு முறையிலேயே நடத்தப்படும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

இந்த முகமை இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தேசிய மருத்துவக் குழுமம் இவ்வாண்டும் வழக்கமாக உள்ள நடைமுறையின் படியே இளநிலை நீட் தேர்வுகளை நடத்துவது என முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வுகள் அனைத்தும் நாடு முழுவதும் உள்ள தேர்வு மையங்களில், ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடைபெறும் என்றும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளான இன்று, ஆம் ஆத்மி, பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் மனு தாக்கல் செய்தனர்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த திரு. மனிஷ் சிசோடியா, திரு. சவ்ரப் பரத்வாஜ், திரு. கோபால் ராஜ் ஆகியோரும், பிஜேபியின் திரு. ஹரிஷ் குரானா, திரு. மஞ்ஜீத்தர் சிங் சிர்ஸா, திரு. ஆஷிஷ் சூட், திரு. கபில் மிஸ்ரா ஆகியோரும் இன்று மனுதாக்கல் செய்தனர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சந்தீப் தீக்ஷித், திரு. அரிபா கான் ஆகியோரும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்புமனு தாக்கலுக்குப் பின், கட்சி உறுப்பினர்கள் சாலைகளில் பேரணியாக சென்று தங்களது வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தனர்.

கட்சியின் மூத்த தலைவர்களும், தலைநகர் தில்லியில் பல்வேறு சட்டப்பேரவை தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>>>><<<<<<

மிஸோரம் மாநிலத்தின் புதிய ஆளுநராக திரு. வி.கே. சிங் இன்று பதவியேற்றார்.

ஐஸ்வாலில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குவஹாத்தி உயர்நிதிமன்ற தலைமை நீதிபதி விஜய் பிஷ்னோய் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திரு. வி.கே. சிங் இதற்கு முன்பு, ராணுவ தலைமைத் தளபதியாகவும், மத்திய இணையமைச்சராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

>>>>>>><<<<<<

உலக புகழ்பெற்ற மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டி இன்று நிறைவு பெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - மெக்ஸிகோவின் Reyes Varela இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-3 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் Robin Haase – கஜகஸ்தானின் Aleksandr இணையை வென்றது.

>>>>>>>END<<<<<<